RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt25112

# வாழ்வை மேம்படுத்தும் முதுமொழிக்காஞ்சி

**ச. அருணாச்சலேஸ்வரன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, கொங்கு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), நஞ்சனாபுரம், ஈரோடு-638107, தமிழ்நாடு, இந்தியா

# Life Enhancing Mutumozhikanchi

**S. Arunachaleshwaran [a, *]**

[a] Department of Tamil, Kongu Arts and Science College (Autonomous), Nanjanapuram, Erode-638107, Tamil Nadu, India

* Corresponding Author: arunachaleshwaran20@gmail.com

Received: 19-09-2024
Revised: 11-01-2025
Accepted: 17-01-2025
Published: 28-01-2025

Check for updates

**ABSTRACT**

Living standards change with time. In that balance, good and bad are based on the environment. Man stands apart in life by varying both time and situation. From birth to death he is reflected in the society due to the control of time and the influence of changing emotions. Mother, father, teacher and education are necessary to discipline what is good and what is bad. Only then does man live morally. In that way, Muthumozhikanchi is a book that helps to distinguish between good and bad and to live life with ethics. The thesis is to reveal how Muthumozhikanchi regulates to improve human life.

**Keywords:** Code of Life, Morality in Friendship, Moral Nature, Enhancing Morality

## முன்னுரை

ஒவ்வொரு இலக்கியமும் தனிமனித வாழ்வை வெளிக்காட்டும் காலக்கண்ணாடியாக விளங்குகின்றது. அதே நிலையில் வாழ்வைச் செம்மைப்படுத்தி நல்வழிப்படுத்தும் களங்கரை விளக்கமாகவும் திகழ்கின்றது. ஒவ்வொரு மனிதனும் அவரவர் வாழ்வில் தனித்தே நிற்கின்றான். மனிதன் தன்னை அறிந்துகொள்ள வேண்டுமாயின் அவனுடைய ஒழுக்கம், எண்ணம் மற்றும் குணம் தெளிவாக இருக்கவேண்டும். அந்நிலையில் முதுமொழிக்காஞ்சியானது வாழ்க்கைக்குத் தேவையான அறக்கருத்துகளைப் போதிக்கும் அறிவுரைக்கோவையாக விளங்குகின்றது. வாழ்விற்கு எது தேவையானது. வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு எப்படி இருத்தல் வேண்டும் கூடாது. என்பது குறித்து விளக்கும் நூலாகவும் திகழ்கின்றது.

## முதுமொழிக்காஞ்சியும் நூல் சிறப்பும்

வாழ்வியலைக் கற்க வேண்டுமென்றால் அதற்கு அறநூல்களே நல்வழிகாட்டியாக விளங்குகின்றன. பதிணென் கீழ்க்கணக்கு நூல்கள் அதில் தனி இடம் பெறுகின்றன. முதுமொழிக்காஞ்சி கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. சங்கம் மருவிய காலத்தில் மனிதர்களுக்கு நல்வழிப்படுத்தத் தோன்றிய நூல்களே பதிணென் கீழ்க்கணக்கு நூல்களாகும். இதில் முதுமொழிக்காஞ்சி 'இன்னிலையகாஞ்சி' என வெண்பவால் வழங்கப்படுகிறது. முதுமொழி என்பது பழமொழி என்னும் பொருளைக்குறிக்கும். காஞ்சி என்றால் அது திணையையும் அல்லது மகளிர் அணியும் ஒருவகை

அணியையும் குறிக்கலாம். அணிகளைக்கோர்ப்பது போல் இந்நூலில் அறக்கருத்துகள் கோர்த்துக் கூறப்பட்டுள்ளன.இதன் ஆசிரியர் கூடலூர் கிழார் ஆவார். இவர் முதுமொழிக்காஞ்சியை சிறந்த பத்து, அறிவு பத்து, பழியாப் பத்து, துவ்வாப் பத்து, அல்ல பத்து, இல்லைப் பத்து, பொய்ப் பத்து, எளிய பத்து, நல்கூர்ந்த பத்து, தண்டாப் பத்து என்னும் பத்து அதிகாரங்களாகப்பகுத்து, ஓர் அதிகாரத்திற்கு பத்துப்பாடல்கள் வீதம் நூறு பாடல்களாக வகுத்து அறக்கருத்துகளைக் கூறியுள்ளார். இந்நூலின் அனைத்து அதிகாரத்திலும் முதல் செய்யுள் மட்டும் 'ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்' என்று தொடங்கி ஈரடியால் ஆன வெண்செந்துறை யாப்பில் அமைந்துள்ளது. ஏனைய ஒன்பது செய்யுள்களும் ஓரடியால் ஆனவை. முதல் அடியை ஏனைய அடிகளுக்கும் பொருத்திப் பொருள் கொள்ள வேண்டும் என்பது ஆசிரியர் கருத்தாகக் காணப்படுகிறது.

## ஒழுக்கத்தின் முக்கியத்துவமும் சான்றோரின் இயல்பும்

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கும் ஒழுக்கம் என்பது முக்கியமாகும். ஒழுக்கம் தான் மனிதனைத் தனித்துவமாகக் காட்டுகிறது. அவ்வழியே கூடலூர் கிழார் ஒழுக்கம் குறித்தே முதலாவது அதிகாரத்தில் முதல் செய்யுளில் முன் வைப்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

ஓதலின் சிறந்தன்று, ஒழுக்கம் உடைமை"1 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி -சிறந்த பத்து-பாடல் எண்-1 -பக்கம்-949)

இச்செய்யுளின் வழி கற்றலைவிட சிறந்தது ஒழுக்கமுடையவராக இருப்பதேயாகும் என்பதை வலியுறுத்துகிறார் .யார் வேண்டுமானாலும் கல்வியைக்கற்றுக்கொள்ளாலாம் ஆனால் ஒழுக்கத்தைக்கடைபிடித்து வாழ்வதே சிறந்த அறம் என்பதையும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தையும் இங்கு அறியமுடிகிறது.

வள்ளுவரும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தை ஒழுக்கமுடைமை அதிகாரத்தின் வாயிலாக,

'ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்'

என்று இக்குறட்பாவின் வழி ஒழுக்கம் எப்போதும் மேன்மையைத் தருவதனால், அந்த ஒழுக்கமே உயிரினும் மேலாக எண்ணி அதைப் பேணிக்காக்க வேண்டும் என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. மேலும் கற்றலை விட சிறந்தது ஒழுக்கம் என்பதை,

'மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்'

என்று கூறுகிறார் .இங்கு மறையோதுபவர் எப்போது வேண்டுமானாலும் படித்துக்கொள்ளலாம் ஆனால் ஒழுக்கமானது கெட்டுவிட்டால் அதுவும் பயனற்றது என்ற குறட்பாவின் கருத்து முதுமொழிக்காஞ்சியின் கருத்துடன் ஒத்திருப்பதைக்காண முடிகின்றது.

ஒழுக்கத்தின் வழி சிறந்த சான்றோர்கள் எவ்வாறு இருப்பர் என்பதையும், எதையெல்லாம் பழிக்கமாட்டார் என்பதையும் பழியாப்பத்தின் வாயிலாக,

"அறியாத்தேசத்து ஆசாரம் பழியார்"2 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - பழியாப்பத்து - பாடல் எண்-8 - பக்கம்-961)

அதாவது தான் பிறநாட்டின் ஒழுக்கத்தினை அறியாமல் இருக்கும் போது அதனைத் தேவையின்றி பழித்துப் பேசாமலும் நடப்பர்,

"சிறியோர் ஒழுக்கம் சிறந்தோரும் பழியார்"3 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - பழியாப்பத்து-பாடல் எண்-10 -பக்கம்-961)

அறிவு மிகுந்த சான்றோர் சிறிய ஒழுக்கத்தைக்கொண்டு வாழ்பவரைப் பழித்துப்பேசி தன்னிலையைக் குறைத்துக் கொள்ள மாட்டார் என்று சான்றோரின் இயல்பைக்காட்டி சான்றோர் எப்படி இருத்தல் வேண்டும் என்பதையும் முதுமொழிக்காஞ்சி உணர்த்துகின்றது.

ஒழுக்கத்தில் தவறாமல் இருக்க வேண்டும் என்றால் கள்ளுண்ணாமல் இருத்தல் அவசியமான ஒன்றாக பொய்ப்பத்தின் வாயிலாக,

“கள்ளுண் போன்சோர் வின்மை பொய்”4

(பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - பொய்ப்பத்து-பாடல் எண்-3 -பக்கம்-975)

இச்செய்யுளின் வாயிலாகக் கள்ளுண்ணும் பழக்கத்தினைக் கொண்டவன் தன் சுய ஒழுக்கத்திலும் தவறுவான் என்றுணர்த்துகின்றது.

## கல்வி

கல்வி என்பது ஒருவர் சரியான பாதையில் செல்ல உறுதுணையாகக் காலம் உள்ள வரை கைகொடுக்கும் குறையாச் செல்வமாகும். அத்தகைய கல்வியின் முக்கியத்துவத்தையும் முதுமொழிக்காஞ்சியானது எடுத்துரைத்து அறிவூட்டுகின்றது.

கல்வியை எவ்வாறு கற்கவேண்டும் என்பதையும் எது கல்விக்கு அழகு என்பதையும்,

“மேதையின் சிறந்தன்று கற்றது மறவாமை”4 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - சிறந்த பத்து-பாடல் எண்-3-பக்கம்-950)

மேற்கண்ட செய்யுளின் வழி ஒருவன் எவ்வளவு வேண்டுமானாலும் கற்றிருக்கலாம் ஆனால் கற்றதைக் காலம் தாண்டியும் மறவாது இருத்தல் வேண்டும் என்றும் அதுவே கற்ற கல்விக்கு அழகு என்றும் உணர்த்துவதை இங்கு அறிய முடிகிறது.

வள்ளுவப் பெருந்தகையும் கல்வியின் முக்கியத்துவத்தினை,

‘கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக’

என இக்குறட்பாவில் கற்பதற்குத் தகுதியான நூல்களைப் பழுதில்லாமல் கற்க வேண்டும் என்றும், கற்றதன் பின்னர் கற்ற அக்கல்வியின் தகுதிக்குத் தகுந்தபடி நடக்கவும் வேண்டும். என்று கூறியுள்ளதை இவ்வாய்வின் வாயிலாகக் குறிப்பிடத்தக்கது.

ஒருவர் கல்வியினை நன்கு கற்றுள்ளார் என்பதை எதனை வைத்து அறிய முடியும் என்று அறிவுப்பத்து வழிகாட்டுகின்றது.

“கற்றது உடைமை காட்சியின் அறிப”5 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - சிறந்த பத்து-பாடல் எண்- 3 -பக்கம்-950)

இப்பாடல் வழி இங்கு ஒருவர் கல்வியறிவு பெற்றுள்ளார் என்பதை அவருடைய செயலினால் அறியமுடியும் என்று உணரமுடிகிறது. நன்கு கல்விப்புலமை பெற்றால் அறிவில் சிறந்துவிளங்க முடியும் என்பதையும் அறிய முடிகிறது. இக்கருத்தினையே மூதுரையில் ஔவையும் முன்வைக்கிறார்,

“மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்

தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோற்குச்

சென்றஇடம் எல்லாம் சிறப்பு” (நீதிநூல்கள் - மூதுரை -26 -பக்கம் -129)

இப்பாடல் வழி மன்னனைக்காட்டிலும் கற்றோர்க்கே சென்ற இடமெல்லாம் என்று கல்வியைத்தெளிவுறக் கற்றவர் அறிவும், தெளிவும் கொண்டு எங்கு சென்றாலும் பிழைத்துக்கொள்வார் என்பதை ஔவையும் முதுமொழிக்காஞ்சியினைப் போல் கல்வியின் முக்கியத்துவத்தினை அறிவுத்துகிறார் என்று இவ்வாய்வின் வழி பதிவுசெய்ய முடிகிறது.

## நட்பு

நட்பு என்பது வாழ்வில் அனைவருக்கும் தேவையான ஒன்று. நட்பானது ஒருவரை நல்வழிப்படுத்தவும், துன்பம் வரும் நேரங்களில் ஏற்றிவிடவும், இன்பக்காலங்களில் மகிழ்வைப்பகிரவும் உதவுகின்றது. அவ்வழியே முதுமொழிக்காஞ்சியில் அறிவுப்பத்தானது நல்ல நட்பினை எவ்வாறு அறியலாம் என்பதை,

“சோராநல் நட்பு உதவியின் அறிப”[6] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - அறிவுப் பத்து-பாடல் எண்- 3 -பக்கம்-955)

மேற்கண்ட இவ்வரிகள் ஒருவர் தன்னோடு நல்லநட்பினைக் கொண்டுள்ளார் என்பதை உற்ற நேரத்தில் உதவி செய்வதினைக்கொண்டு அறிந்து கொள்ளலாம் என்பதை அறிவுறுத்துவதை உணரமுடிகின்றது, இதே போல் வள்ளுவரும் நல்நட்பிற்கு உதாரணமாக,

“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே

இடுக்கண் களைவதாம் நட்பு” (திருக்குறள்-பொருட்பால்-நட்பு-குறள்-788)

இக்குறட்பாவின் வாயிலாகத் தனக்கு துன்பம் வரும் நேரத்தில் உதவுவதே சிறந்த நட்பு என்று குறிப்பிடுகிறார். முதுமொழிக்காஞ்சியின் அறிவுப்பத்தின் கருத்து இக்குறட்பாவில் ஒத்திருப்பதை இங்கு அறியமுடிகின்றது.

அதனைத் தொடர்ந்து கூடா நட்பு கேடு விளையும் என்ற பழமொழிக்கேற்ப எவருடன் நட்புகொள்ளக்கூடாது என்பதைப்பற்றியும் நல்கூர்ந்த பத்தின் பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது.

“செற்றுடன் உறைவோனைச் சேர்தல்நல் கூர்ந்தன்று”7 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - நல்கூர்ந்த பத்து-பாடல் எண்-3-பக்கம்-955)

அதாவது, ஒருவர் மனத்துள்ளே பகைகொண்டும் வெளியே நட்புறவு கொள்வதாய் நடித்து நம்மோடு பயணப்படுபவரிடத்து நட்பு கொள்ளக்கூடாது என்று உணர்த்துகின்றது. காரணம் இதுபோன்று குணம் கொண்டவரால் எப்போது வேண்டுமானாலும் ஆபத்து நேரலாம் என்பது இதன் பொருளாக உணரமுடிகிறது.

அதே போன்று நல்கூர்ந்த பத்தின் மற்றுமொரு பாடல் வரியானது நட்பு இல்லாதவரிடத்தில் உதவியை நாடிச்செல்லுதல் கூடாது என்பதை,

“நட்பில் வழிச்சேறல் நல்கூர்ந்தன்று”8 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி -நல்கூர்ந்த பத்து-பாடல் எண்- 3 -பக்கம்-955)

என்று உணர்த்துகிறது. இதன் மூலம் முதுமொழிகாஞ்சி நட்பு குறித்து எவ்வாறு வாழ்வியல் நெறிப்படுத்துகிறது என்பதை அறிய முடிகின்றது.

## ஈகை

கொடுத்தல் என்பது அறத்திற்கான வாழ்வியல் நெறியாகும். அவ்வழியில் ஈகை குறித்தும் முதுமொழிக்காஞ்சி எடுத்துரைக்கின்றது. அறிவுப்பத்து, அல்லபத்து, இல்லைப்பத்து, துவ்வாப்பத்து மற்றும் பழியாப்பத்து ஆகிய அதிகாரங்களில் ஈகை குறித்த கருத்துகள் இடம் பெறுகின்றன.

ஒருவன் இரக்கக்குணம் கொண்டவன் என்பதை அவனுடைய கொடுக்கும் குணத்தைக் கொண்டு அறிய இயலும் என்பதை,

"ஈரம் உடைமை ஈகையின் அறிப"9 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - அறிவுப் பத்து- பாடல் எண்- 2-பக்கம்-954)

இவ்வரிகள் மூலம் அறிவுப்பத்து எடுத்துரைக்கின்றது. இதன் வாயிலாகக் கொடுப்பதன் வாயிலாக தர்மமும் நல் எண்ணமும் மனதில் நிலவும் என்பதையும் முதுமொழிக்காஞ்சி உணர்த்துவதை அறிய முடிகிறது.

கொடுக்கும் குணம் இல்லாவிட்டால் புகழினைப்பெற முடியாது என்பதை அல்ல பத்து,

"சோராக் கையன் சொன்மலை அல்லன்"10 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - அல்ல பத்து- பாடல் எண்- 4 -பக்கம்-967)

இவ்வரிகள் மூலம் சோராக் கையன் என்று குறிப்பிடுவது கொடுக்காதக் கையினை உடையவன் புகழினை அடையமாட்டான் என்பதாகும். இதன்மூலம் ஈகை எத்தகைய சிறப்புடையது என்பதை அறியமுடிகின்றது.

ஒன்றை விருப்பமில்லாமல் கொடுப்பது ஈகையாகாது என்பதைத் துவ்வாப்பத்து,

"பேணில் ஈகை மாற்றலின் துவ்வாது"[11] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி- 3-முதுமொழிக்காஞ்சி -துவ்வாப் பத்து - பாடல் எண்- 4-பக்கம்-963)

என்று உணர்த்துகின்றது. மேலும், அல்ல பத்து ஈகை எவ்வழியில் செல்வம் பெற்றுக் கொடுத்தல் ஈகையாகாது என்பதை,

"அறத்தாயின் ஈயாதது ஈகை அன்று"[12] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி- 3-முதுமொழிக்காஞ்சி - அல்ல பத்து-பாடல் எண்- 8 -பக்கம்-969)

மேற்கண்ட இப்பாடல் வரிகளின் வாயிலாக அறவழியில் சம்பாதித்துக் கொடுத்தல் தான் ஈகை என்றும், அறவழி அல்லாத வாயிலாகச் சம்பாதித்து ஒருவர் கொடுக்கின்றேன் என்றால் அது ஈகையைச் சேராது என்று எது ஈகை என்பது பற்றி எடுத்துரைப்பதை இங்கு நாம் அறிய முடிகின்றது.

இல்லாமல் கொடுப்பதை விட, கொடுக்க முடிந்தும் கொடுக்காமல் அதை மறப்பது என்பது கொடுமையானது என்பதை,

"இயல்வது கரத்தலின் கொடுமை இல்லை"13 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி- 3-முதுமொழிக்காஞ்சி - இல்லைபத்து- பாடல் எண்- 5 -பக்கம்-973)

இவ்வரிகளின் மூலம் இருந்தும் தராமல் இருத்தல் என்பது இருந்தும் இல்லாமல் இருத்தலைவிட கொடுமையானது என்றும் இருக்கும் போது கொடுக்காமல் விடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதை இல்லைப்பத்து எடுத்துரைக்கிறது. இதே போல் **'இயல்வது கரவேல்'** என்று ஆத்திசூடியில் ஔவை எடுத்துரைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் வாயிலாக ஈகையின் முக்கியத்துவத்தினை முதுமொழிக்காஞ்சி அறிவுறுத்துவதை உணரமுடிகிறது.

## இன்பம் மற்றும் துன்பம் குறித்த கருத்துகள்

வாழ்வில் இன்பம் மற்றும் துன்பம் குறித்த நிலையானது வாழ்க்கைச் சக்கரத்தில் மாறி மாறி நிகழக்கூடிய ஒன்று அதனை எவர் எவ்வாறு கையாள்கிறார் என்பது அவருடைய மனநிலையைப் பொருத்தே அமைகின்றது. அவ்வழியே இன்ப துன்ப நிலை குறித்தான கருத்துகளும் முதுமொழிக்காஞ்சியின் வாயிலாக வெளிப்படுகின்றது.

செயல் முயற்சியால் ஏற்படும் துன்பத்தை விரும்புபவருக்கு இன்பம் வந்து சேரும் என்பதை எளிய பத்து,

"துன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது"[14] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - எளிய பத்து-பாடல் எண்- 5 -பக்கம்-980)

என்று விளக்குகின்றது. மேலும் இன்பத்தைத் தேடிச் செல்பவருக்குத் துன்பம் தான் இறுதியில் கிட்டும் என்பதை,

"இன்பம் வெய்யோர்க்கு இன்பம் எளிது"15 (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - எளிய பத்து- பாடல் எண்- 6-பக்கம்-980)

என்று எளிய பத்து துன்பம் எவர் அடைவார் என்பதைப் பற்றி எடுத்துரைக்கின்றது.

அதனைத்தொடர்ந்து இதே கருத்துகளை மாற்றுகோணத்தில் தண்டாப்பத்து அதிகாரமும் எடுத்துரைகின்றது.

"இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்"[16] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - தண்டாப் பத்து-பாடல் எண்- 7-பக்கம்-988)

எவர் இன்பத்தைத்தேடுகிறாரோ அவர் அத்தேடலின் இடையே வரும் துன்பத்தைப் பொருட்படுத்தக் கூடாது என்று உணர்த்துகிறது. ஆனால் பின்னர் துன்பத்தை அனுபவிக்கப்போகிறோம் என்பதை அறிந்த ஒருவர் இன்பத்தை விட்டு விலகமாட்டார் என்பதை,

"துன்பம் வேண்டுவோன் இன்பம் தண்டான்"[17] (பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்-பகுதி-3-முதுமொழிக்காஞ்சி - தண்டாப் பத்து-பாடல் எண்- 8-பக்கம்-988)

இப்பாடல் வாயிலாக ஆய்ந்து எடுத்துரைப்பதைக்காண முடிகிறது. இதன் வாயிலாக இன்பம் மற்றும் துன்பத்தினை எவர் பெறுகிறார் என்பதை உணரமுடிகிறது.

## முடிவுரை

மனித வாழ்வானது பல்வேறு நிலையில் பாகுபடுகிறது. அவ்வழியில் தனிமனித வாழ்வு நேர்கோட்டுப்பாதையில் ஒரே சீராக அமைய வழிகாட்டியாக ஓர் ஊன்றுகோல் ஒவ்வொருவருக்கும் ஏதேனும் ஒரு வழியில் தேவைப்படுகின்றது. இங்கு இலக்கியங்கள் காலம் கடந்து சந்ததி விட்டு சந்ததிக்கு பயணித்து அமரத்துவம் பெறுகின்றன.அவ்வழியே நீதி இலக்கியங்கள் மனிதன் மனிதனாக இருப்பதற்கு நெறிகாட்டியாக இருக்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதுமொழிக்காஞ்சியானது மனிதனின் தேவைகளுக்கேற்ற வகையில், எவ்வாறு இருத்தல் வேண்டும் என்றும் இப்படி இருந்தால் நன்மையும் இப்படி இருந்தால் தீமையும் விளையும் என்பதை வாழ்க்கை நெறிப்படுத்துகிறது. அவ்வழியே இவ்வாய்வின் மூலம் ஒழுக்கம், கல்வி, நட்பு, ஈகை, இன்பம் மற்றும் துன்பம் குறித்தான பல்வேறு நிலைப்பாடுகளில் நின்று முதுமொழிக்காஞ்சி வழிகாட்டியாக நெறிப்படுத்துகின்றது என்பதே இந்த ஆய்வின் முடிவுரையாக அமைகின்றது.

## References


பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும், மூன்றாம் தொகுதி, வர்த்தமான பதிப்பகம்,40,சரோஜினிதெரு,சென்னை-17.மறுபதிப்பு ஏப்ரல் 2006.

பதினெண் கீழ்க்கணக்கு தொகுதி -3 , வ.த. இராமசுப்பிரமணியம்,செல்லப்பா பதிப்பகம் முதற் பதிப்பு டிசம்பர்,2009, 48 தானப்ப முதலி தெரு,மதுரை -625 001.

அருணாவின் நீதி நூல்கள், கீர்த்தி எம்., ஏ, அருணா பப்ளிகேசன்ஸ்,12, முதல் தெரு, இணைப்பு வடக்கு ஜகநாத நகர், வில்லிவாக்கம், சென்னை - 600049.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License